மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, செலவைக் காட்டிலும் வருமானம் பெருகவேண்டும் என்கிற அடிப்படையில்தான் செயல் படவேண்டும். ஆனால் இங்கே செலவைக் காட்டிலும் வருமானம் குறைவாக இருப்பதற்கான காரணங்களைக் கண்டு ஆராய்ந்து வருமானத்தைப் பெருக்கு வதற்கான வழிமுறைகளை மேற்கொள்ளலாம்.

Municipalities of Tirunelveli, etc.

* 219 Q.—Thiru T. GANAPATHY: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether there is any proposal to integrate the municipalities, viz., Tirunelveli, Palayamkottai and Melapalayam to form a Corporation; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

திரு. டி. கணபதி: இந்த மூன்று நகராட்சிகளும் சேர்ந்தாற்போல இருப் பதனால் பொதுமக்களுடைய சௌகரியம், ஒருமைப்பாடு இவற்றைக் கருதி இந்த மூன்றையும் ஒரு மாநகராட்சியாக மாற்ற அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: அப்படிப்பட்ட கோரிக்கையை அந்த மூன்று நகராட்சிகளும் தெரிவிக்கவேண்டும். பொதுமக்களும் விரும்ப வேண்டும். அப்படிப்பட்ட கோரிக்கை எதுவும் அந்த மூன்று நகராட்சிகளிடம் இருந்து வரவில்லை. தனித்தனியாக இயங்கி, தங்கள் தங்கள் பணிகளையே சிறப்பாக ஆற்ற அவை விரும்புகின்றன. அவர்கள் அதுபோன்ற ஒரு கோரிக் கையை அனுப்பிவைத்தால் அரசு அதற்குப் பிறகு ஆராய்ந்து நிதி வசதி இருக்கின்றதா என்று பார்க்கலாம்.

Sri Subramaniaswami Arts College

* 220 Q.—Thiru A. PARANDHAMAN: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state whether there is any proposal under the consideration of the Government to take up the work of constructing pucca buildings for the Sri Subramaniaswami Arts College, Tiruttani, this year?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: கல்லூரி கட்டுவதற்கு இடம் இன்னும் ஒதுக்கப்படவில்லை. இடவசதி செய்து தரப்பட்ட பின்பு கட்டிடங் கள் கட்டுவது பற்றி ஆலோசிக்கப்படும்.

திரு. ஆ. பரந்தாமன்: தலைவர் அவர்களே, தியாகராய கல்லூரி முதல்வர் திரு. ராஜகோபால் நாயுடு அவர்கள் எந்த இடத்தில் கட்டிடம் கட்டலாம் என் பதற்கான அறிக்கையைச் சமர்ப்பித்து விட்டார்களா? எப்போது அந்த வேலை துவங்கப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா நெடுஞ்செழியன்: சுப்பிரமணிய தேவஸ்தானத்தைச் சேர்ந்தவர்கள் அதற்கான நிலத்தைக் கொடுப்பதாகக் குறிப்பிட்டார்கள். ஆனால் இன்னும் நிலம் ஒப்படைக்கவில்லை. நிலம் ஒப்படைக்கப்பட்ட பின்னர் தான் கட்டிடம் கட்டுவதற்கான முயற்சியை மேற்கொள்ளலாம்.